## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு ஜீன் மாதம் 26–ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பு 4–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண்.44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திருமதி.ஷர்மிளா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | வீரபத்திரன் | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

26.06.2025 **OS.No. 7/2023 பி.வா.சா. 4 ஆஜர்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு யார் விபரம் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன் . நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்து கையெழுத்து செய்தேனா என்றால் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். தாவா வழக்கின் தரப்பினர்கள் யார் என்றால் வாதியின் பெயர் ஈஸ்வரன் , ராஜாஜி, ராஜபாண்டி ஆகியோர் ஆவர். பிரதிவாதியின் பெயர் க.செல்வி ஆவர். தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியும். 1 வது இலக்க சொத்தின் சர்வே எண்.209/2 ஆகும். அதன் விஸ்தீரணம் 97 சென்ட் ஆகும். தாவா 1 வது இலக்க சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியும் . வடக்கே, மேற்கே பிச்சை புஞ்சை நிலம் உள்ளது. கிழக்கே, தெற்கே வீரப்பன் புஞ்சை உள்ளது. 2 வது இலக்க சர்வே எண் என்ன என்றால் 367/14 ஆகும். அதன் விஸ்தீரணம் 15 சென்ட் ஆகும். தாவா இரண்டு இலக்க சொத்துக்களுக்கான ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி ஆவணங்களை எப்போது எந்த ஆண்டு பார்த்தேன் என்றால் 2 வருடத்திற்கு முன்பு பார்த்தேன் . நான் மேற்படி ஆவணங்களை பார்த்த காலத்தில் தாவா வழக்கு நடந்ததா இல்லையா என்ற விபரம் தெரியுமா என்றால் தாவா வழக்கு நடந்தது. மேற்படி ஆவணங்களை நான் பார்த்த காலத்தில் யார் பெயரில் தாவா சொத்துக்களுக்கு பட்டா இருந்தது என்றால் ஞாபகம் இல்லை . தாவா சொத்துக்கள் ஆதியில் யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் சி.ரா.ஆதிமூலத் தேவர் பெயரில் இருந்தது . மேற்படி ஆதிமுலத்தேவரை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி ஆதிமுலத்தேவர் எங்கே பிறந்தார் எங்கே வாழ்ந்தார் என்றால் கீழராங்கியத்தில் பிறந்தார். திருமணம் ஆகி சொக்கநாத இருப்பில் வாழ்ந்து வந்தார். மேற்படி ஆதிமுலத்தேவருக்கு எத்தனை இலக்க சொத்துக்கள் இருந்தது என்றால் 10 இலக்க சொத்துக்களுக்கு மேல் இருக்கும். ஆதிமுலத்தேவரின் உடன் பிறந்தவர் யார் என்றால் ராமுத்தேவர். மேற்படி ராமுத்தேவரும் ஆதிமூலத்தேவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்களா என்றால் முதலில் ஒற்றுமையாக இருந்தார்கள் . திருமணத்திற்கு பின்னீடு சொத்து தகராறு வந்தது. ஆதிமுலத்தேவருக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 60 வருடத்திற்கு மேல் இருக்கும். ஆதிமுலத்தேவர் பெயரில் இருந்து ராமுத்தேவர் பெயருக்கு பட்டா எப்போது மாறியது என்றால் அது அவரை தான் கேட்க வேண்டும்.

UDR காலத்திற்கு முன்பே மேற்படி தாவா சொத்திற்கான பட்டா ராமுத்தேவர் பெயருக்கு மாறிவிட்டது என்றால் சரியல்ல. UDR ல் ராமுத்தேவர் பெயரில் பட்டா மாறிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவர்களை தான் கேட்க வேண்டும். சுமார் 38 வருடங்களுக்கு முன்பு UDR காலத்தில் ராமுத்தேவர் பெயரில் பட்டா மாறியது என்றால் அவரைத் தான் கேட்க வேண்டும் . ஆதிமூலத்தேவர் எந்த ஆண்டு இறந்தார் என்றால் எனக்கு தெரியாது . ராமுத்தேவர் பெயரில் பட்டா மாறியதற்கு ஆதிமூலத்தேவர் அவர் இறக்கும் வரையில் பட்டா மாறுதல் சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுத்திருப்பார் . ராமுத்தேவர் பெயரில் பட்டா மாறியதை அடுத்து அதனை மாற்ற ஆதிமூலத்தேவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல . தாவா சொத்துக்கள் ஆதிமூலத்தேவரும ராமுத்தேவரும் பாகம் பிரித்து கொண்டதில் தாவா சொத்து ராமுத்தேவருக்கு ஒதுக்கப்பட்டு அவர் பெயரில் பட்டா ஏற்பட்டதால் ஆதிமூலத்தேவர் அது குறித்து ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. ராமுத்தேவருக்கு தாவா சொத்துக்கள் ஒதுக்கப்பட்டு அவர் காலம் வரையில் ராமுத்தேவர் அனுபவித்து வந்து அதன் பின் அவருடைய வாரிசுகளான இந்த வாதிகள் தாவா சொத்துக்களை அனுபவர் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல . மேற்படி விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல . நான் 2 ஆண்டுகளுக்கு முன்பு தாவா சொத்துக்களுக்கான ஆவணங்களை பார்த்தாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி ஆவணங்களை 2 ஆண்டுகளுக்கு முன் பார்க்க வேண்டிய அவசியம் என்ன என்றால் எனது அண்ணன் சி.வா.வீ.கருப்பையா அவர்கள் பார்த்து கொண்டிருந்தார் . அதன் பின் நான் பார்த்தேன். எனது அண்ணன் கருப்பையா வழக்கறிஞரை நேரடியாக பார்த்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் பல வழக்குகள் தொடர்பாக வழக்கறிஞரை நேரடியாக பார்த்தார் . எனது அண்ணன் கருப்பையா ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார். யார் பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஈஸ்வரன் , ராஜாஜி, ராஜபாண்டி ஆகியோர் பேரில் பல வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் . மேற்படி பல வழக்குகள் எந்தெந்த சர்வே நம்பருக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது எனது அண்ணனை தான் கேட்க வேண்டும். மேற்படி தாவா சொத்துக்களுக்கான நான்குமால்கள் தெரிந்த பின்னரும் எதற்காக சா.சா.ஆ.6 ஆவணத்தை தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் கேட்க வேண்டிய அவசியம் என்னவென்றால் வாதிகள் அவர்கள் சொத்து என்று உரிமை கோரியதால் மேற்படி விபரம் குறித்து நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்டு சா .சா.ஆ.6 ஆவணத்தை பெற்றேன். மேற்படி சா.சா.ஆ.6 ஆவணத்தில் தாவா சொத்துக்களுக்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது . யார் பெயரில் உள்ளது என்றால் 2 சொத்துக்களுமே ஆதிமூலத்தேவர் பெயரில் இருப்பதாக சொல்லியுள்ளார்கள் . ஆதிமுலத்தேவர் பெயரில் தாவா சொத்துக்களுக்கு பட்டா இருப்பதாக மேற்படி சா .சா.ஆ.6 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல . என்னுடைய அண்ணன் இறப்பை பதிவு செய்வதற்கு தகவல் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன் . எனது அண்ணன் எப்போது காலமானார் என்றால் 01.01.2024 ம் தேதி காலமானார். எனது அண்ணன் இறப்பை பதிவு செய்வதற்கு நான் எதுவும் தகவல் கொடுக்கவில்லை என்றாலும் , நான் யாரோ பதிவு செய்த இறப்பு சான்றிதழின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. சா.சா.ஆ.7 ஆவணமான எனது அண்ணனின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல . அதே போல் சா .சா.ஆ.6 ஆவணத்தையும் தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணனுக்கு முதல் திருமணம் எப்போது நடைபெற்றது என்றால் 1969 ஆண்டு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நடைபெற்றது.

மேற்படி திருமணம் எல்லோருக்கும் சொல்லப்பட்டு நடத்தப்பட்டதா அல்லது அவர்கள் மட்டும் திருமணம் செய்து கொண்டார்களா என்றால் எல்லோருக்கும் சொல்லி திருமணம் நடைபெற்றது. மேற்படி எனது அண்ணனின் முதல் திருமணத்திற்கு பத்திரிக்கை அடிக்கப்பட்டதா என்றால் இல்லை. எனது அண்ணனுக்கு நடைபெற்ற திருமணம் பதிவு திருமணம் என்று சொல்லியுள்ள நிலையில் நான் திருமண பதிவு பதிவேட்டில் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எனது அண்ணனுக்கு 1969 ல் திருமணம் நடைபெறவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது அண்ணனின் இரண்டாவது மனைவி பிச்சை அம்மாளின் தந்தை பெயர் என்ன என்றால் போ .ரா.ஆதிமூலத்தேவர் ஆகும். போ.ரா.ஆதிமூலத்தேவரின் மனைவி பெயர் என்ன என்றால் காமாட்சி அம்மாள் ஆகும் . சி.ரா.ஆதிமூலத்தேவரின் மனைவி பெயர் என்ன என்றால் பொன்னம்மாள் என்ற இருளாயி ஆகும். மேற்படி சி.ரா.ஆதிமூலத்தேவருக்கும் பொன்னமமாள் என்ற இருளாயிக்கும் பிறந்தவர் பெயர் என்ன என்றால் பிச்சமுத்து ஆகும் . பிச்சைமுத்துவின் மகள் பெயர் என்ன என்றால் க.செல்வி ஆகும். பிச்சைமுத்துவின் மகள் பெயர் செல்வி கிடையாது கலுங்காயி என்றால் அவர் பெயர் கலுங்காயி என்ற செல்வி ஆகும் . இந்த வழக்கில் கண்ட பிரதிவாதியின் பெயர் கலுங்காயி என்ற செல்வி என்று குறிப்பிடப்பட்ட ஆவணம் ஏதேனும் நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பிச்சைமுத்துவின் மகள் கலுங்காயி என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது அண்ணன் கருப்பையாவிற்கும் அவருடைய 2 வது மனைவி பிச்சையம்மாளுக்கும் பிறந்தவர் தான் இந்த வழக்கில் கண்ட பிரதிவாதி க .செல்வி என்றால் சரியல்ல. மேற்படி செல்வியுடன் பிறந்தவர்கள் தான் நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள கோபால், கணேசன், ஐயம்மாள், பூமாரி ஆகியோர் என்றால் சரியல்ல . நான் வழக்கிற்காக கருப்பையாவின் 2 வது மனைவிக்கு பிறந்த க .செல்வியை கருப்பையாவின் முதல் தாரத்து மகள் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam